முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

**2022**

ஆசிரியர் : ஏ.எம். சனூஸ்
077 16 16 340

# அறிவுத்தாரகை
# ARIVUTHTHARAHAI

**5**

**EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL, 2022**

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை, 2022

**கருத்தரங்கு** **3**

## வினாத்தாள் - I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் : ...............................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

**வினாத்தாள் - I இற்கான புள்ளித்திட்டம்**


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 3 | 11. | 28 | 21. | 53 | 31. | 78 |
| 2. | 5 | 12. | 30 | 22. | 55 | 32. | 80 |
| 3. | 8 | 13. | 33 | 23. | 58 | 33. | 83 |
| 4. | 10 | 14. | 35 | 24. | 60 | 34. | 85 |
| 5. | 13 | 15. | 38 | 25. | 63 | 35. | 88 |
| 6. | 15 | 16. | 40 | 26. | 65 | 36. | 90 |
| 7. | 18 | 17. | 43 | 27. | 68 | 37. | 93 |
| 8. | 20 | 18. | 45 | 28. | 70 | 38. | 95 |
| 9. | 23 | 19. | 48 | 29. | 73 | 39. | 98 |
| 10. | 25 | 20. | 50 | 30. | 75 | 40. | 100 |

| | |
|---|---|
| 85 - 100 மிக நன்று | |
| 75 - 85 நன்று | |
| 75 கீழ் - அதிகம் முயற்சிக்கவும் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்**<br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | <br>V/I/T |
| **இரண்டாவது பரீட்சகர்**<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | <br>V/I/T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்**<br>மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | <br>V/I/T/EMF |
| **பிரதான பரீட்சகர்**<br>மேற்பார்வை செய்தேன்.<br>இறுதிப் புள்ளிகள் சரியாகும். | <br>V/I/T/CH |


[பக். 2 ஐப் பார்க்க


**1.** பின்வரும் மூன்று உருக்களில் ஒன்றில் வேறுபாடு உள்ளது. அந்த உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)


**2.** வெற்றிடத்துக்கு இருக்க வேண்டிய உருவைத் தெரிவு செய்க.






(1) (2) (3)

**3.** பின்வரும் உருக்களில் ஒத்த பண்புக்குரிய உருச்சோடி யாது?




(1) (2) (3)

**4.** பின்வரும் உருவில் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

**5.** உரு 1 இல் உள்ள உருவில் இருந்து உரு 2 இல் உள்ள கோடுகளை நீக்கும்போது பெறப்படும் விடை?





(1) (2) (3)

ஏ.எம். சனூஸ்


[பக். 3 ஐப் பார்க்க

சுட்டெண் : ..............................................

**6.** □ x □ = ○ □ எனவும் ○ + □ = △ எனவும் தரப்பட்டுள்ளது. இதற்கேற்ப △ □ இற்குப் பொருத்தமான எண் யாது?


(1) 74 (2) 75 (3) 95

**7.** ஒரு புத்தகத்தின் இரு பக்கங்களில் எழுத்துக்கள் குறித்த விதத்தில் இருக்கும் உருவைத் தெரிவு செய்க.





(1) (2) (3)

**8.** தரப்பட்டுள்ள செவ்வகத்தாளில் முறிகோடுகள் வழியே வெட்டும்போது கிடைக்கும் முக்கோணிகள் எத்தனை?



(1) 6 (2) 5 (3) 4

**9.** சிறிய குவளையினால் எத்தனை தடவைகள் நிரை ஊற்றும்போது பெரிய பாத்திரம் நிரம்பும்?




(1) 6 (2) 12 (3) 18

**10.** பின்வரும் பாடலினால் குறிப்பிடப்படுவது யாது?

எங்கள் வீட்டுச் செல்லப் பிள்ளை
கருப்பாய் இருப்பாள் கவனத்தை ஈர்த்திடுவாள்
உலகெங்கும் சுற்றிட விடாமல்
உலகச் செய்தி பல ஒலித்திடுவாள்.

(1) நாய் (2) வானொலி (3) தொலைக்காட்சி

**11.** கடிகாரத்தின் முகம் இரண்டு துண்டுகளாக உடைந்து விட்டது. ஒரு துண்டில் 10, 11, 12, 1, 2, 3 ஆகிய இலக்கங்கள் இருந்தன. மற்றைய துண்டில் இருந்த இலக்கங்களின் கூட்டுத்தொகை யாது?

(1) 37 (2) 39 (3) 41

**12.** பின்வரும் உரைப்பகுதியின் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொற்கள் அடங்கிய பகுதி எது?

அழகை அனைவரும் விரும்புகிறோம். ______ வாழும் வீடு அழகாக இருக்க வேண்டும். அழகுக்கு மேலும் அழகு தருவது ______ வளர்க்கப்படும் வண்ண வண்ண மீன்களே! சுறுசுறுப்பாக நீந்திச் செல்லும் ______ வற்றாத மகிழ்ச்சியை எமக்குத் தருகின்றன.




(1) (2) (3)


**13.** மீனவன் : கடல் எனின்,

(1) மாணவன் : படிப்பு (2) வைத்தியர் : வைத்தியசாலை (3) விளையாட்டு : துடுப்பு

**14.** 40 பக்கங்களைக் கொண்ட ஒரு புத்தகத்தின் 27 ஆம் 28 ஆம் பக்கங்கங்கள் கிழிக்கப் பட்டன. கிழிக்கும்போது அதனோடு இணைந்த எந்த இரு பக்கங்களுக்கும் கழன்று வரும்?


(1) 12 உம் 13 உம் (2) 13 உம் 14 உம் (3) 15 உம் 16 உம்

**15.** கோலத்திற்கு ஏற்ப ? குறியீட்டுக்குப் பொருந்தும் எண் யாது?





(1) 2 (2) 3 (3) 4

**16.** மட்டக்களப்பிலிருந்து ஹபரனை நாற்சந்தியை முன்னோக்கி வரும் ஒருவர் தனக்கு முன்னே இருந்த அறிவிப்புப் பலகையை பார்வையிட்டார்.




திருகோணமலையில் இருந்து ஹபரனை நாற்சந்தியை நோக்கி வரும் ஒருவருக்குத் தெரியும் அறிவிப்புப்பலகை யாது?




(1) (2) (3)

17. ஒரு விருந்துபசார நிகழ்வுக்கு வருகை தந்த ஐவருள் பூபதி விருந்து நிறைவு பெறும் நேரத்தில் வருகை தந்தான். அருண் இரண்டாவதாக வந்தான். கார்த்திக் அருண் வருவதற்கு முன் வந்திருந்தார். ஆனந் வந்த பின்பே பூபதி விருந்துக்கு வந்தான்.


பின்வரும் கூற்றுகளை அவதானிக்குக.

A - கார்த்திக் முதலாவதாக வந்தார்.
B - அருண் இரண்டாவதாக வந்தார்.
C - ஆனந் மூன்றாவதாக வந்தார்.
D - சிவா நான்காவதாக வந்தார்.
E - பூபதி ஐந்தாவதாக வந்தார்.

இவற்றில் எந்த மூன்று கூற்றுகள் உண்மையானவை.

(1) A, B, C ஆகியன (2) A, B, E ஆகியன (3) A, B, D ஆகியன

18.




இரண்டு பாத்திரங்களில் உள்ள பந்துகளின் எண்ணிக்கை ஒன்றுக்கொன்று சமனாவதற்கு A பாத்திரத்திலிருந்து B பாத்திரத்திலிருந்து இடவேண்டிய பந்துகளின் எண்ணிக்கை?

(1) 8 (2) 6 (3) 4

19. சரத் ஆண் பிள்ளையாவான். அவனுக்கு இருந்த சகோதரர்களின் எண்ணிக்கையும் சகோதரிகளின் எண்ணிக்கையும் சமமாகும். சரத்தின் தம்பியான சாரங்கனுக்கு இருந்த சகோதரர்களின் எண்ணிக்கை சகோதரிகளின் எண்ணிக்கையிலும்,

(1) மிகக் குறைவாகும் (2) சமமாகும் (3) மிகக் கூடுதலாகும்

20. ராதா, சாலினி, பவி, சித்ரா ஆகிய நால்வரில் மூவர் சாலினியை விட நிறை குறைந்தவர்கள். இருவர் சித்ராவை விட நிறை கூடியவர்கள். ராதா பவியை விட நிறை குறைந்தவள். இவர்களில் நிறை குறைந்தவர் யார்?

(1) பவி (2) ராதா (3) சாலினி

21. ஒரு வியாபாரி ஒரு கூடையில் இருந்த தேங்காய்களில் மூன்றில் ஒரு பகுதியையும் மிகுதி ஒன்றையும் இன்னுமொரு கூடையில் இட்டார். மீதியை இரு சமகுவியலாகப் பிரித்து விற்பனை செய்தார். வியாபாரியிடம் ஆரம்பத்தில் இருந்த தேங்காய்களின் எண்ணிக்கை?


(1) 25 (2) 26 (3) 27


22. குறித்த ஓர் ஆண்டின் யூன் மாதம் 16 ஆம் திகதி திங்கட்கிழமை ஆகும். அவ்வாண்டின் மே மாதம் 16 ஆம் திகதி என்ன கிழமை?

(1) வெள்ளிக்கிழமை (2) சனிக்கிழமை (3) ஞாயிற்றுக்கிழமை


23. ஒரு மீற்றர் நீளமான கயிற்று வடமொன்று இரு துண்டுகளாக வெட்டப்பட்டது. வெட்டிய துண்டுகளில் ஒரு துண்டு மற்றைய துண்டைவிட 10 cm குறைவாகும். நீளம் கூடிய கயிற்று வடத்தின் அளவு யாது?

(1) 45 cm (2) 50 cm (3) 55 cm

**24.**  எனின், இந்நான்கு குறியீடுகளையும் பன்படுத்தி எழுதக்கூடிய மிகக்கூடிய பெறுமதியுள்ள எண்களைக் காட்டும் குறியீட்டுத் தொகுதி?




(1) (2) (3)

**25.** 

A B

உரு A இல் உள்ள மூன்று மாபிள்களில் ஒரோயொரு மாபிள் மாத்திரம் வேறுபட்ட நிறையைக் கொண்டுள்ளது. உரு B இல் உள்ள தராசினை மாத்திரம் பயன்படுத்தி குறைந்தது எத்தனை தடவையில் வேறுபட்ட நிறையுள்ள மாபிளைக் கண்டு பிடிக்க முடியும்?

(1) 1 (2) 2 (3) 3

**26.** ஒரு வரிசையில் மிதுரன் முன்னாலிருந்து 9 ஆவதாக நின்றான். அவனுக்கு பின்னால் உள்ளவர்களின் எண்ணிக்கை அவனுக்கு முன்னால் உள்ளவர்களின் எண்ணிக்கை அரைவாசியாகும். இவ்வரிசையில் உள்ளவர்களின் எண்ணிக்கையின் அரைவாசியாகும். இவ்வரிசையில் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?


(1) 12 (2) 13 (3) 17

**27.** இருபத்தோராம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்திற்கு பொருத்தமான ஆண்டு எது?

(1) 2022 (2) 2021 (3) 2020

**28.** ஒரு பிள்ளை கதைப்புத்தகமொன்றின் 21 ஆம் பக்கத்திலிருந்து 32 ஆம் பக்கம் வரை வாசித்தது. பிள்ளை வாசித்த தாள்களின் எண்ணிக்கை?

(1) 12 (2) 11 (3) 6

**29.** 


ஒரு தோட்டத்தில் நடப்பட்ட மரங்களின் ஒழுங்கு படத்தில் காட்டப்பட்டுள்ளது. இதில் மரம் B இற்கு கிழக்குத் திசையிலும் மரம் H இற்கு தென்மேற்குத் திசையிலும் உள்ள மரம் எது?

(1) F (2) G (3) D

**30.** X தொடக்கம் XX வரையுள்ள உரோம எண்குறிகளை எழுதும்போது எழுதப்படும் உரோம எண்குறி ‘X’ இன் எண்ணிக்கை?

(1) 13 (2) 12 (3) 11



[பக். 7 ஐப் பார்க்க


**31.** பின்வரும் பாடலை வாசித்து வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

கற்பிப்போர் கண்கொடுப்போரே! - அந்தக்
கணக்காயர் உரையினில் இரு செவி சேரே
நற்பெயர் எடுத்திட வேண்டும்! - நாளும்
நன்றாகப் படித்து நீ முன்னேற வேண்டும்

பாடலில் "கணக்காயர்" என்று கூறப்பட்டுள்ளது.

(1) கணக்காளர் (2) வைத்தியர் (3) ஆசிரியர்


**32.** பிள்ளையொன்று தன்னிடமிருந்த வட்டங்களைப் பயன்படுத்தி கீழே காட்டப்பட்டுள்ளவாறான கோலங்களை அமைத்தது.




இக்கோலத்தின் படி 4 ஆவது சந்தர்ப்பத்தில் கோலத்தை அமைக்க தேவைப்படும் வட்டங்களின் எண்ணிக்கை யாது?


(1) 3 (2) 12 (3) 15

**33.** பை, பேனைகள், சிவப்பு நிறப்பேனை, பென்சில் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பை இவ்வரிப் படம் காட்டுகின்றது. இதில் சிவப்பு நிறப்பேனை என்பதைக் காட்டும் ஆங்கில எழுத்து,




(1) S (2) R (3) Q

**34.**




திரவ அளவு இடப்பட்ட மூன்று பாத்திரங்களில் உள்ள திரவத்தை சமப்படுத்துவதற்கு செய்யக்கூடிய இலகுவானதும் விரைவானதுமான வழிமுறை?

(1) A, B, C ஆகிய மூன்று பாத்திரத்திலும் உள்ள திரவத்தை வேறொரு பாத்திரத்தில் இட்டு சமப்படுத்தல்

(2) B, C ஆகிய இரு பாத்திரத்திலும் உள்ள திரவத்தை வேறொரு பாத்திரத்தில் இட்டு சமப்படுத்தல்

(3) B பாத்திரத்திலிருந்து 100 ml நீரை C பாத்திரத்தில் இடல்



[பக். 8 ஐப் பார்க்க

**35.** சிவா படிப்பில் மிகவும் கெட்டிக்காரன். யார் வினாக் கேட்டாலும் உடனே பதில் கூறுவான். ஒருநாள் கணிதப்பாட ஆசிரியை கேட்ட வினாவிற்கு அவனால் பதில் கூறமுடியவில்லை. மேற்படி சம்பவத்தினை விளக்க பொருத்தமான பழமொழி........


(1) எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு

(2) ஆனைக்கும் அடி சறுக்கும்

(3) ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது


**36.** எமது விளையாட்டுக் குழுவில் உள்ள அனைவரும் உயரமானவர்கள். லோசன் உயரமானவன். அதன்படி லோசன் உயரமானவன் எனும் கூற்று,

(1) சரியானது (2) தவறானது (3) கூறமுடியாது




**37.** 

சதுர வடிவக் காணியொன்றின் இரண்டு பக்கங்களில் கம்பித்தூண்கள் நடப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகிறது. அதன்படி, மொத்தக் காணியைச் சுற்றி இம்முறையில் கம்பித் தூண்களை நடுவதற்கு இன்னும் தேவைப்படும் கம்பித் தூண்களின் எண்ணிக்கை?


(1) 10 (2) 9 (3) 7

**38.** 

அருகிலுள்ள கட்டத்தினுள் உள்ள உருக்களில் செங்கோணம் அற்ற உரு?

(1)  (2)  (3) 

● ரவி வீட்டிலிருந்து பாடசாலைக்குப் பயணம் செய்த பாதையை இவ்வுரு காட்டுகிறது.




**39.** ரவி வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்லும்போது ஒரு தடவை மட்டும் திரும்பிய திசை யாது?

(1) கிழக்கு (2) மேற்கு (3) தெற்கு

**40.** ரவி தனது வீட்டிலிருந்து பாடசாலைக்குப் பயணிக்கும்போது அவன் தனது இடது கைப்பக்கத்திற்கு திரும்பிய தடவைகளின் எண்ணிக்கை?

(1) 2 (2) 3 (3) 4

**- *** -**

සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2022

ஆசிரியர் : ஏ.எம். சனூஸ்
077 16 16 340

# அறிவுத்தாரகை
## ARIVUTHTHARAHAI

5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL - 2022

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2022

கருத்தரங்கு 3

## வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் : ............................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** (சில வினாக்களில் உப பகுதிகள் உள்ளன.)
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **கோட்டினை மாத்திரம் இடுக.**
* மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

**வினாத்தாள் - IIஇற்கான புள்ளித்திட்டம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 6 | 11. | 2 | 21. | 4 |
| 2. | 2 | 12. | 2 | 22. | 2 |
| 3. | 2 | 13. | 1 | 23. | 2 |
| 4. | 2 | 14. | 1 | 24. | 2 |
| 5. | 2 | 15. | 1 | 25. | 2 |
| 6. | 1 | 16. | 2 | 26. | 2 |
| 7. | 1 | 17. | 2 | 27. | 2 |
| 8. | 2 | 18. | 2 | 28. | 4 |
| 9. | 2 | 19. | 2 | 29. | 2 |
| 10. | 1 | 20. | 4 | 30-59 | 30 |

| | |
|---|---|
| 85 - 100 மிக நன்று | |
| 75 - 85 நன்று | |
| 75 கீழ் - அதிகம் முயற்சிக்கவும் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T/EMF |
| **பிரதான பரீட்சகர்** மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும். | V/II/T/CH |

[பக். 2 ஐப் பார்க்க

**1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

சோம சுந்தரப் புலவர் யாழ்ப்பாணத்தில் நவாலி எனும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர், கதிர்காமர், இலக்குமிப் பிள்ளையின் தவப்புதல்வராக 1878 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி பிறந்தார். இவர் தமது பதினைந்தாவது வயதிலேயே பாடல்கள் இயற்றத் தொடங்கினார். நாற்பது ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றினார். தங்கத்தாத்தா என அழைக்கப்பட்ட இவர், ஆடிப்பிறப்பு, கத்தரி வெருளி போன்ற பாடல்களைப் பாடிப் பரிசும் முதன்மையும் பெற்றார்.

● **பந்தியை துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

(i) சோம சுந்தரப் புலவர் எந்த ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்?

: ..............................................................................................................................

(ii) இவர் எத்தனையாவது வயதில் பாடல்கள் இயற்றத் தொடங்கினார்?

: ..............................................................................................................................

(iii) பந்தியில் ஒற்றைக்கொம்பும் விசிறியும் இடம்பெறும் வினைச்சொல்லை எழுதுக?

: ..............................................................................................................................

(iv) சோம சுந்தரப் புலவர் பாடிய பாடல்கள் எவை?

: ..............................................................................................................................

(v) 'இறந்தார்' என்பதன் எதிர்ச்சொல் யாது?

: ..............................................................................................................................

(vi) சோம சுந்தரப் புலவரின் சிறப்புப் பெயர் யாது?

: ..............................................................................................................................

**2. வெற்றிடத்துக்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) எங்கள் பாடசாலையில் .................................. (பரிசளிப்பு / பரிசழிப்பு) விழா நடைபெற்றது.

(ii) வெயில் காலங்களில் இயற்கைப் பானமான ................................ (இளனி / இளநீர்) பருக வேண்டும்.

**3. பின்வருவன எவ்வகைப் பெயர்ச் சொற்கள் என எழுதுக.**

(i) பசுமை, அன்பு, நீலம் ..............................................................................................

(ii) சித்திரை, காலை, புதன்கிழமை ..............................................................................

**4. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாயின் சரி (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் இடுக.**

(i) 'மீனவர்கள்' என்பது அஃறிணை படர்க்கைப் பன்மைச் சொல். (......................)

(ii) 'தொடங்கினார்' என்பது உயர்திணை இறந்தகால ஒருமை வினைமுற்று (......................)

**5. பொருத்தமான நிறுத்தக் குறியை இடுக.**

| |
|---|
| கிராமங்கள் அழகானவையா |

ஏ.எம். சனூஸ்

சுட்டெண் : ................................................

**6.** **வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) ஒரே சமயத்தில் எட்டு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன் ............................................ (அட்டவதானி / சதாவதானி) ஆவான்.

(ii) அமலன் தனது நண்பனின் காதுக்குள் குசுகுசுத்தான். இங்கு குசுகுசுத்தல் என்பதன் கருத்து ............................................ (இரட்டைக்கிளவி / இரகசியம் பேசுதல்) என்பதாகும்.

**7.** **பின்வரும் பழமொழியின் கருத்தை எழுதுக.**

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.

: ..............................................................................................................................................................

**8.** **தரப்படும் பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்கு சொற்களாக மாற்றி எழுதுக.**

(i) புட்டு : ......................................................  (ii) பதட்டம் : ............................................................

**9.** (i) **சேர்த்தெழுதுக.**

தேன் + நீர் : ..............................................................................

(ii) **பிரித்தெழுதுக.**

நற்செய்தி : ..............................................................................


**10.** **கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் உள்ள செயப்படுபொருள் அடைமொழிச் சொல்லின் கீழ்க் கோடிடுக.**

வெள்ளை முயலைப் புல்வெளியில் கண்டேன். : .......................................................

**11.** **பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

(i) Ball : ....................................................  (ii) Class : .....................................................

**12.** **தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.**

(i)  ...........................................

(ii)  ....................................................

**13.** **பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.**

My / Younger / This / Sister / is

: ..............................................................................................................................................

**14.** **'எலியட்ட' என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

: ..............................................................................................................................................

**15.** **பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**


எனக்கு அப்பம் வேண்டும்.

: ..............................................................................................................................

**16.** தரப்பட்டுள்ள எண்ணுக்கு முந்திய எண்ணை எழுத்தில் எழுதுக.

10 050 : ..........................................................................................................................................

**17.**




(i) இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை பின்னமாக எழுதுக?

: ..........................................................................................

(ii) நிழற்றப்படாத பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக?

: ..........................................................................................

**18.**



அருகிலுள்ள கட்டத்தில் உள்ள பூக்களின் இதழ்களின் எண்ணிக்கையை உரோம எண்ணில் எழுதுக?

: ..........................................................................................

**19.** கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| 12 மணித்தியாலக் கடிகாரம் | 24 மணித்தியாலக் கடிகாரம் |
|---|---|
| மு.ப. 8.45 | (i) .......................................... |
| (ii) .......................................... | 22 : 50 |

**20.** ஒரு கடையில் 14 kg 650 g வெள்ளைச் சீனியும் 20 kg 310 g பழுப்புச் சீனியும் இருந்தன. அதில் 17 kg 250 g பழுப்புச் சீனி விற்கப்பட்டது.

(i) கடையில் இருந்த சீனியின் மொத்த அளவு யாது?

: ................................. kg .............................. g

(ii) விற்கப்பட்ட பின்னர் எஞ்சியிருக்கும் பழுப்புச் சீனியின் அளவு யாது?

: ................................. kg .............................. g

**21.** பின்வரும் சிட்டையை பார்த்து விடை எழுதுக.

| பொருள் | 1 kg இன் விலை |
|---|---|
| நெத்தலி | 900.00 |
| பருப்பு | 124.00 |
| அரிசி | 100.00 |


(i) தந்தையார் 2 kg பருப்பு, 2 kg 500 g அரிசி, 250 g நெத்தலி ஆகியவற்றை வாங்கினார். இவற்றிக்கான மொத்த விலை யாது?

: .............................. ரூபாய் ........................... சதம்

(ii) இப்பொருள்களை வாங்குவதற்கு 800 ரூபாவைச் செலுத்தும்போது கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

: .............................. ரூபாய் ........................... சதம்

**22.**




கட்டத்தினுள் உள்ள இலக்கங்களைக் கொண்டு அமைக்கத்தக்க மிகப்பெரிய எண்ணை எழுதுக?

: ..........................................................................................................

**23.** ஒரு பிள்ளை ஒருநாளில் குடிக்க வேண்டிய நீரின் அளவு 1*l* 500 *ml* ஆகும். அதற்கேற்ப அப்பிள்ளை மூன்று நாட்களில் குடிக்க வேண்டிய நீரின் அளவைக் காண்க?

: ...................................... *l* ........................................... *ml*

**24.** ஒரு சைக்கிளோட்டப் போட்டியில் ஒரு போட்டியாளர் பூர்த்தி செய்ய வேண்டிய மொத்தத் தூரம் 40 km 800 m ஆகும். அப்போட்டியில் சங்கர் 15 km 410 m தூரம் சென்றுள்ளார். அவர் போட்டியை முடிப்பதற்கு மேலும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும்?

: .................................... km ........................................ m

**25.** ஒரு பெட்டியில் உள்ள பென்சில்களின் எண்ணிக்கை 6 ஆகும். அத்தகைய 48 பெட்டிகளில் உள்ள பென்சில்கள் 4 வகுப்புகளிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஒரு வகுப்பிற்குக் கிடைத்த பென்சில்களின் எண்ணிக்கை யாது?

: ..........................................................................................................................................

**26.** ஒரு வீட்டுத்தோட்டத்தில் வீட்டிற்கு வடக்கே மரமுந்திரிகையும் தெற்கே மூங்கில் பற்றையும், மூங்கில் பற்றைக்கு கிழக்கே கொய்யா மரமும் காணப்பட்டது. வீடு அமைந்திருப்பது கொய்யா மரத்திற்கு எத்திசையில்?

: ..........................................................................................................................................

**27.** பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையை எழுதுக.

(i) முக்கோண முகங்கள் மாத்திரம் உள்ள திண்மம் யாது?

: ..........................................................................................

(ii) சதுர முகங்களை மாத்திரம் கொண்ட திண்மம் யாது?

: ..........................................................................................

**28.** எண்கள் எழுதப்பட்டுள்ள ஐந்து அட்டைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| 2130 | 2700 | 3080 | 3425 | 873 |
|---|---|---|---|---|
| A | B | C | D | E |

(i) D, E ஆகிய இரண்டு அட்டைகளிலும் குறிக்கப்பட்டுள்ள எண்களின் மொத்தத்தைக் காண்க?

: ..........................................................................................................................

(ii) அட்டை C இற் குறிக்கப்பட்டுள்ள எண்ணிற்கும் அட்டை B இற் குறிக்கப்பட்டுள்ள எண்ணிற்குமிடையே உள்ள வித்தியாசத்தைக் காண்க?

: ..........................................................................................................................

**29.** ஒரு வாரத்தில் பிள்ளைகளின் வரவு பற்றிய தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| திங்கட்கிழமை | செவ்வாய்க்கிழமை | புதன்கிழமை | வியாழக்கிழமை | வெள்ளிக்கிழமை |
|---|---|---|---|---|
| 500 | 568 | 590 | 575 | 550 |

(i) செவ்வாய்க் கிழமையிலும் பார்க்க வியாழக் கிழமை எத்தனை பிள்ளைகள் கூடுதலாகப் பாடசாலைக்கு வந்துள்ளனர்?

: ..........................................................................................................................

(ii) வந்த பிள்ளைகளின் எண்ணிக்கை 580 இலும் கூடுதலாக உள்ள நாள் எது?

: ..........................................................................................................................



[பக். 6 ஐப் பார்க்க

● **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30.** தைப்பொங்கல், மீலாதுன்நபி விழா ஆகிய பண்டிகைகளுடன் தொடர்புடைய சமயத்தவர்களை முறையே காட்டும் விடை எது?

(1) முஸ்லீம்கள், தமிழர்கள் (2) தமிழர்கள், சிங்களவர்கள் (3) தமிழர்கள், முஸ்லீம்கள்

**31.** வகுப்பறையில் குழு வேலைகளைச் செய்யும்போது மாணவரிடம் இருக்க வேண்டிய ஒரு நல்ல பண்பு எது?

(1) தமது கருத்துக்களின் படி மாத்திரம் வேலை செய்தல்.

(2) இறுதி வரையில் வேலையில் ஈடுபடுதல்.

(3) ஏனையோரை விட முன்பாகத் தனது வேலையை முடித்தல்.

**32.** நாம் செய்யத்தக்க வழக்காறுகளுள் ஒன்று

(1) உணவு உண்ண முன்னர் கைகளைக் கழுவிக் கொள்ளல்.

(2) சப்புக் கொட்டியவாறு உண்ணல்.

(3) மூத்தோரை எதிர்த்துப் பேசுதல்.

**33.** அலுதெனிய பண்டா, கப்புறுபஸ்தி பண்டாளகே டேவிட், தொன்புள்ளே வெதரானை ஆகிய பெயர்களால் அழைக்கப்பட்ட இலங்கை சுதந்திரப் போராட்டத் தலைவர் யார்?


(1)


(2)


(3)

**34.** வெடித்துப் பரம்படையும் வித்துக்கள்?

(1) மஞ்சாடி, எருக்கலை (2) துத்திரி, இலவம் பஞ்சு (3) காசித்தும்பை, வெடிப்பலவன்

**35.** பறவைகள் எனப்படுபவை

(1) பறப்பதற்கு சிறகுகள் இருத்தல்

(2) இரையைக் கண்டறிவதற்கு மீசை இருத்தல்

(3) நீந்துவதற்கு செட்டைகள் இருத்தல்

**36.** தனது இரையைக் கொத்தி உண்ணும் அனைத்துமுண்ணி பிராணி

(1) அணில் (2) நாய் (3) கோழி

**37.** 'மண்ணைக் கிண்டி உழுதிடும் மனிதனுக்கு நண்பன் நான்' இதில் குறிப்பிடப்படும் உழவரின் நண்பன்,

(1) கலப்பை (2) மண்புழு (3) கறையான்

**38.** நாம் தனிப்பட்ட வகையில் பயன்படுத்தும் படுக்கையறைப் பொருள் **அல்லாதது.**

(1) போர்வை (2) துவாய் (3) தலையணை

**39.** பண்டைய அரசர்களின் நீர்ப்பாசன பணியினால் நம் நாட்டில் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கை,

(1) தேயிலை (2) இறப்பர் (3) அரிசி

**40.** பின்வருவனவற்றுள் புரதச் சத்து அடங்கியுள்ள தாவர உணவு.

(1) சோயாஅவரை (2) முட்டை (3) இறைச்சி

**41.** பின்வருவனவற்றுள் சக்தி கூடுதலாக விரயமாகும் விளையாட்டு

(1) கரம் (2) கயிறிழுத்தல் (3) சதுரங்கம்

**42.** ‘ஆனகட்டி ஏலேலப்படி சேர்குழப்பி
அயிறு சம்பா ஏலேலப்படி நாத்து நட்டு’ இப்பாடல் ஒரு,

(1) சேனைப்பாடல் (2) வண்டிப்பாடல் (3) மீனவர்பாடல்

**43.** வாளேந்திய சிங்க உருவம் காணப்படுவது.

(1) தேசிய இலச்சினையில் (2) தேசியக் கொடியில்

(3) தேசிய இலச்சினையிலும் தேசியக் கொடியிலும்

**44.** நகர்ப்புறங்களில் நீர் பெறும் மூலங்கள் **ஒன்றல்லாதது.**

(1) கிணறு (2) நீர்த்தொட்டி (3) குழாய்நீர்

**45.** காபோவைதரேற்று, கொழுப்பு கொண்ட உணவுகள் என்பன

(1) சக்தி தரும் உணவுகளாகும்.


(2) வளர்ச்சிக்கு உதவும் உணவுகளாகும்.


(3) பாதுகாப்புத் தரும் உணவுகளாகும்.


**46.** பின்வருவனவற்றுள் இயற்கையான விபத்தாக அமையக்கூடியது?

(1) பாம்பு தீண்டல் (2) மின்னல் தாக்கம் (3) நீரில் மூழ்குதல்

**47.** பந்தனநாடா வெட்டுதல், பிளாஸ்டர் வெட்டுதல் போன்ற வேலைகளுக்கு பயன்படும் கருவி,


(1)


(2)


(3)

**48.** அவசர விபத்துச் சேவையை வழங்கும் ‘சுவசெரிய’ அம்பியுலன்ஸ் சேவையைப் பெற அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்,

(1) 1969 (2) 1990 (3) 1910

**49.** நாகமரம், நீலோற்பலம், காட்டுக்கோழி, கரப்பந்து போன்றன

(1) இந்தியாவின் தேசிய குறியீடுகளாகும்.

(2) அவுஸ்திரேலியாவின் தேசிய குறியீடுகளாகும்.

(3) இலங்கையின் தேசிய குறியீடுகளாகும்.

**50.** இரவில் மலரும் பூ பின்வருவனவற்றுள் யாது?


(1)


(2)


(3)

**51.** உணவாகப் பயன்படுத்தும் இலை, பூ முறையே,

(1) செவ்வரத்தை, அகத்தி (2) முருங்கை, செவ்வரத்தை (3) செவ்வரத்தை, முருங்கை

**52.** தனது பாதுகாப்பிற்காக உடலை பந்து போல மாற்றிக் கொள்ளும் திறன் கொண்ட பிராணி?

(1) மரவட்டை (2) ஆமடில்லா (3) பச்சோந்தி

**53.** புத்தளிப்பு இசைக்கருவி மேளம் (தம்பட்டம்) தயாரிக்க தேவையான கழிவுப் பொருள்

(1) சோடா மூடிகள் (2) சிரட்டை (3) தகரப்பேணி

**54.** தலைக்கவசம், வெட்டுளி, கல்லுடைக்கும் சுத்தியல் என்பவற்றை பயன்படுத்தி தொழில் செய்பவர்?

(1) கொல்லர் (2) கருங்கல் உடைப்பவர் (3) கொத்தர்

**55.** இனிப்பான உணவுகள், மாப்பொருள் உணவுகள் அதிகம் உண்பதால் ஏற்படும் நோய்?

(1) நீரிழிவு (2) இரப்பையழற்சி (3) புற்றுநோய்


**56.** பனிக்கட்டிகளை உருகாது நீண்ட காலம் பேணுவதற்குச் செய்யக் கூடியது.


(1) மேலே மரத்தூளைப் பரவி மூடி வைத்தல்


(2) கண்ணாடிப் பாத்திரத்தில் இட்டு வைத்தல்

(3) ரெஜிபோம் பெட்டியில் இட்டு திறந்து வைத்தல்

**57.** ஒரே தடவையில் அதிகளவானோர் பயணம் செய்யக்கூடிய தரைவழிப் போக்குவரத்து சாதனம் எது?


(1)


(2)


(3)

**58.** அனுராதபுரம், பொலன்னறுவை ஆகியன இலங்கையின்,

(1) வடமாகாணத்தைச் சேர்ந்த நகரங்களாகும்.

(2) வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த நகரங்களாகும்.

(3) வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த நகரங்களாகும்.

**59.** உள்ளத்தை இதப்படுத்தும் செயற்பாட்டில் முதலிலும் இறுதியிலும் செய்ய வேண்டிய படிமுறை?

(1) உள்ளத்தைத் தளர்த்துதல், மலர்வு

(2) உடலைத் தளர்த்துதல், மலர்வு

(3) மனவுறுதி, உறுதிப்பாடு

**60.** **'நான் விரும்பும் பொழுதுபோக்கு'** என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. ..............................................................................................................................

..............................................................................................................................

2. ..............................................................................................................................

..............................................................................................................................

3. ..............................................................................................................................

..............................................................................................................................